(Tamil)

1136
10/21

3254 — 19 — P

Let us take the pledge
Tamil
Govt of Madras
1 copy
3254

# ஆணையேற்போம்!

## அரசியல் பாடல்கள்

வெ. நாராயணசாமி

Tamil

வெளியிடுவோர்:
சுதந்திரம் பதிப்பகம்
51, ரங்கப்பிள்ளை வீதி,
புதுவை.

விலை] [அணா 0-1-6

NATIONAL A…
No 3…
Date 6·4·7…
GOVT. OF INDIA

# அ…

நிலையற்ற முதலாளர் கோட்டை எல்லாம்
நீர்த்தூளி யாக்கிபுது வாழ்வை எய்த
உலைக்களத்தி லடிபட்டு நைந்து நைந்து
உழைத்துவரும் பாட்டாளி வர்க்கத் திற்கே
கலங்கரையின் விளக்கேபோல் காட்சி தந்த
களப்பால் **குப்பு**வொடு **பரத்வாஜ**ருக்கும்
மலபாரின் **சங்கரர்**க்கும், **நம்பியா**ர்க்கும்
மாலையென இந்நூலை அர்ப்பணித்தேன்.

வெ. நாராயணசாமி

...லைகள்

வெ. நாராயணசாமி

NATIONAL ARCHIVES
LIBRARY
No. 3
Date 29.12.48
GOVT. OF INDIA.

வெளியிடுவோர்:
சுதந்திரம் பதிப்பகம்
51, ரங்கப்பிள்ளை வீதி,
புதுவை.

விலை] [அணா 0-1-6

# பதிப்புரை

தோழர். நாரா பிரஞ்சிந்திய தொழிலாளர் இயக்கத்தில் பூத்தப் புரட்சிக் கவி. "ஜனசக்தி"யில் வெளிவந்திருக்கும் அவரது பாடல்கள் பலவற்றின்மூலம் தமிழ்நாட்டுப் பாட்டாளி மக்களும் அவரை நன்கறிவர்.

> **"உழைத்துவரும் பாட்டாளி வர்க்கத்திற்கே கலங்கரையின் விளக்கேபோல் காட்சி தந்த களப்பால் குப்புவொடு, பரத்வாஜுக்கும், மலபார் சங்கரர்க்கும், நம்பியார்க்கும்"**

அர்ப்பணிக்கப் பட்டுள்ள இப்பாடல்கள் ஒவ்வொன்றிலும் இவ் வீரத் தியாகிகளின் தீர முழக்கம் கேட்கிறது

தோழர். **பரத்வாஜ்**, உருவாகிவரும் இந்திய பாஸிஸத்தின் கட பலி. அன்று பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் வேட்டை நாய்கள் துருவித் துருவித் தேடின அவரை. பரத்வாஜ் பற்றி [illegible]ய் தீச்சுவாலை. தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிக் கனல். [illegible] அண்ட முடியவில்லை. பல ஆண்டுகள் தலைமறைவாய் [illegible]ின் மூலை முடுக்கெல்லாம் சுற்றி அலைந்தார் இந்தியத் தொழிலாளிக்கு வர்க்கபோதம் ஊட்ட. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைக் கட்டிய கர்த்தாக்களில் முதல்வர். மத்தியக் கமிட்டியில் அங்கம் வகித்த தலை சிறந்த அரசியல் மேதை. மார்க்ஸிஸ–லெனினிஸ தத்துவங்களின் அறிவுக் களஞ்சியம். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் கம்யூனிஸ்ட் குழுவிற்குத் தலைமை வகித்தவர்.

அன்று ஏகாதிபத்திய – எதிர்ப்பு அணியில் நின்ற காங்கிரஸின் கொடியை அவர் உயர்த்திப் பிடிக்கச் செய்த தியாகங்களுக்கு ஈடில்லை! **இன்று** காங்கிரஸ் சர்க்கார் பணமூட்டைகளின் சேவகனாய் நின்று அவரை சிறையிலடைத்துக் கொன்ற மாபாதகத்திற்கும் ஈடில்லை!!

இதனால் இந்நாட்டுத் தொழிலாளி வர்க்கத்திற்கு எழுந்துள்ள சீற்றத்தை வெளிப்படுத்துகிறார் தோழர் நாரா:

> **" பழிகொள்ளுவோம்–.................................................**
>
> **பரத்வாஜ் ஆவி – பறித்தவர் தம்மை'**

எப்படி பழி கொள்ளுவது ?

கடு முதலாள -- நிலவாதிக்க கயவரின் ஆட்சி ஒழிப்
போம்

.........................................................................................

பொறுமை என்பதினிமேல் இல்லை புரட்சித் தீயில்
குதிப்போம்
புதுமை திகழும் பொதுஜன ஆட்சி பூரணமாக
அமைப்போம்"

இதேபோல் தஞ்சை விவசாயிகளின் தனிப்பெரும் தலைவன் **களப்பால் குப்புவின்** பெயரால் "துருப்பிடித்த இச்சமூகத்தை சுட்டெரி"க்க அறைகூவி அழைக்கிறார்.

**களப்பால் குப்புசாமி** தீண்டாதார் என்று இத்தீச்சமூகம் ஒதுக்கும் வகுப்பில் பிறந்தவர் செங்கொடியிலே மனித வாழ்வின் லட்சியத்தைக் கண்டார் தஞ்சை மிராசுதார் திமிங்கலங்களுக்கு அவரது நாமம் சிம்ம சொற்பனமாகியது. காங்கிரஸ் ஆளவந்தார்களின் கருணையால் விஷம் கொடுக்கப்பட்டு சிறையில் உயிர் நீத்தார்.

இதுபோன்று ஜனத்துரோகப் போக்கில் செல்லு[illegible] கிரஸ் ஆட்சியின் பணச்சேவையை, பாஸிஸப் போக்கை[illegible] மாய் படம்பிடித்துக் காட்டுகின்றன இப்பாடல்கள். கு[illegible] **"போட்டாரே ஆட்சொல்லி சட்டமே"** என்ற பாட்டு இந்த நாட்டின் மூலை முடுக்கெல்லாம் எதிரொலிக்கவேண்டும்.

உண்மையான சுதந்திரத்திற்காக, பொதுஜன ஜனநாயகத்திற்காக, முதலாளித்துவ காங்கிரஸ் தலைமையை எதிர்த்து இன்று இந்தியப் பாட்டாளி மக்கள் நடத்திவரும் போராட்டத்திற்கு இப்பாடல்கள் உணர்ச்சியும், உத்வேகமும் ஊட்டுவதாயுள்ளன. அதனாலேயே ஒரு சல்லி லாபத்தை எதிர்பார்க்காது மிகக் குறைந்த விலைக்கு இதை வெளியிடுகிறோம்.

25-7-48 சுதந்திரம் பதிப்பகத்தார்.

புதுவை

## 1 பரத்வாஜ்.

ஜப்தும்கி சலே என்ற ரத்தன் மெட்டு

எங்கள் குலமணியே – பரத்வாஜே
ஏழை பங்காளா—ஏவும் போர்க்குண சீலா (எ)

1) செங்கொடி கட்சியின் நன்முதல்வா
தேய்ந்த சமூகப் படைத்தலைவா
இங்கினிமேலுனைக் காண்பதெப்போ
எங்கள் வீரா—எரிமலை நெஞ்சுடைத்தீரா (எ)

2) தேசிய காங்க்ரஸ் சபைதனிலே
சேர்ந்தாய் கட்சியின் சார்பினிலே
ஆசையாய் உன்புகழ் பேசிய கூட்டமே
இன்று—ஆவிபறித்தது கொன்று (எ)

3) மக்களின் லட்சியம பெரிதென்றே
வாழ்ந்து உழைத்தாய் நீ நின்றே
ஏங்கியே காச நோய் பிடித்தே
உடல் நொந்தாய்--இரவும் பகலுமே நைந்தாய் (எ)

4) கடுஞ்சுர நோயால் வாடினையே
காங்கிர ஸாட்சியார் நாடி ஐயோ
படுக்கையில் கைது செய்து சிறையில்
அடைத்தார்--பச்சை உதிரம் குடித்தார் (எ)

5) பகைவரை எதிர்க்கும் வழி தெரிந்தாய்
பன்னிரண் டாண்டு சிறையிருந்தாய்
திகைத்திட ரத்தம் கக்கியபோதும்
விடாது—சிறையே செய்த தடாது (எ)

6) ஒளியே! நிதியே!! நீ மறைந்தாய்
உழைப்போர் உளந்தனிலே நிறைந்தாய்
துளியும் உனது கொள்கை விடாமலே
செய்ய-துணைபுரி நாங்களும் உய்ய (எ)

## 2 சபதம்

கெஜல்

பாட்டாளி மக்களே—முஷ்டியைத் தூக்குவோம்
**பரத்வாஜ்** ஆவியின் மீது நாம் ஆணையை செய்குவோம்

வேறு மெட்டு

பழிகொள்ளுவோம் – பழிகொள்ளுவோம்
**பரத்வாஜ்** ஆவி – பறித்தவர் தம்மை (ப)

1) கனலுறும் கொள்கையுடைய நம் தோழன்
கட்சியைக் கட்டி வளர்ப்போம்
கடுமுதலாள—நிலவாதிக்க கயவரின்
ஆட்சி ஒழிப்போம்
இனியொரு கணமும் தனியுடைமைக்கே
இடமே இலையெனச் செய்வோம்
எல்லாம் இங்கே எங்கள் உரிமை என்று
பறைகொட்டிச் சொல்வோம் (ப)

2) வறுமை, பஞ்சம், நோயும், கொடியும் மலிந்த
சமூகம் அழிப்போம்
வையகமெங்கும் **பரத்வாஜ்** நாமம்
வானமதிர ஒலிப்போம்
பொறுமை என்ப தினிமேல் இல்லை
புரட்சித் தீயில் குதிப்போம்
புதுமை திகழும் பொதுஜன ஆட்சி
பூரணமாக அமைப்போம் (ப)

## 3 களப்பால் குப்புசாமி.

ஆயே பிவோ என்ற மெட்டு

இளங்குருத்தே – எம்முயிரே
என்றுனைக் காண்போம் எங்கள் தோழா

களப்பால் குப்புசாமி வீரா
காலைக் கதிரே எங்கள் தோழா (இ)

1) செங்கொடிப் போதம் ஏற்றவனே
தேசமெங்கும் புகழ் பெற்றவனே
மங்கும் நில ஆதிக்கத்தைப்
மாய்க்க விரதம் பூண்டவனே (இ)

2) ஏழை விவசாய ஜீவ வர்க்க
ஏராள பண்ணை யடிமைகட்கே
வாழ புரட்சி வழி வகுத்த
வள்ளலே குப்புசாமி தோழா (இ)

3) ஜாதி, மத பேத மற்றதொரு
சமூகம் அமைக்க உழைத்தவனே
நீதி, நேர்மை மிகும் அரசே
நிலைத்திடப் பாடு பட்டவனே (இ)

4) தஞ்சை மிராசுதாரர் கூட்டம்
சதி செய்தே தேடி பிடிக்கச் செய்தார்
வஞ்சக ஆளவந்தார் உன்மேல்
வலிய கொலைக்குற்றஞ் சாட்டிவிட்டார் (இ)

5) பஞ்சையர் வாழ்வைப் பறித்திடவே
பக்காக் கொள்ளையைப் பெருக்கிடவே
அஞ்சாத உன்னை தூக்கிலேற்ற
ஆணவத்தோடு தீர்ப்பளித்தார் (இ)

6) வெஞ்சிறைக் கோட்டம் போட்டவுடன்
விடுதலைக்கே மக்கள் ஆர்ப்பரித்தார்
அஞ்சிய காங்க்ரஸ் மிராசு கூட்டம்
ஆளையே கொல்ல திட்டமிட்டார் (இ)

7) வயிற்றில் வலிகண்டு துன்பமுற்றுய்
வஞ்சகர் உன்னை நெருங்கி அந்தோ!

உயிர் பறிக்க மருந்தில் விஷம்
ஒன்ருய்க் கலந்தே தந்து விட்டார் (இ)

8) ஆருயிர்த் தோழா உனைப் பிரிந்தோம்
ஆத்மம் கனல் பொங்கச் சொல்லுகின்ருேம்
பாரிலுன் கொள்கை யடையுமட்டும்
பாட்டாளி நாங்கள் ஓயமாட்டோம் (இ)

## 4 ஆணையேற்போம்.

பட்டினிக் கொடுஞ்சிறைக்குள் என்ற மெட்டு

ஓயமாட்டோம் ஓயமாட்டோம் ஓயமாட்டோம் — நாங்களே
உடலைவிட்டு உயிர்போனாலும் ஓயமாட்டோம் — நாங்களே

எடுப்பு

தூய எங்கள் குப்புசாமித் தோழன்மீது சத்தியம்
துருப்பிடித்த இச்சமூகம் சுட்டெரிப்போம் நிச்சயம் (ஓ)

1) குப்புவை மடியச்செய்த கொடியராட்சி நாடுவோம்
கொலைபுரிந்த வஞ்சந்தீர்க்க கொக்கரித்துச் சாடுவோம்
இப்புவியில் எங்கள் தோழன் லக்ஷியத்தை விட்டிடோம்
எலும்பும் தோலுமாகி நாங்கள் பட்டினிக் கிடந்திடோம் (ஓ)

2) பண்ணையடிமை இழிமுறையை பாதளத்தி லாழ்த்துவோம்
பகைத்திட ஜமீன்முறைப் பரம்பரையை வீழ்த்துவோம்
என்னவந்து நேரினும் இம்மிகூட அஞ்சிடோம்
இந்த உயிர் எங்களுக்கே சொந்தமல்ல துஞ்சிடோம் (ஓ)

3) நீங்கள்மட்டும் இந்த்ரபோக வாழ்விலே திளைப்பதோ?
நிதம் உழைக்கும் நாங்கள்மட்டும் நெஞ்சுசுருகி மாய்வதோ?
இங்கினிமேல் வித்தியாச ஈனக்காட்சி போக்குவோம்
எங்களை உறிஞ்சுவோரை எத்திளத்திக் தாக்குவோம் (ஓ)

4) உழுவனுக்கே நிலமுழுதும் உரிமையாக்கும் மட்டிலும்
உறுதொழிலே நாட்டின் சொந்த உடமையாக்கும் மட்டிலும்
விழிகள் மீது விழிகள் வைத்து வீரமாய்ப் போராடுவோம்
விணில்வந்துமோதுவோரை முதுகொடித்துப்போடுவோம் ஓ

5) உழைக்கும் வாக்க ராஜ்ஜியத்தை உண்டுபண்ணித் தீரு
உன்னத சுதந்திரத்தின் உச்சிமீது ஏறுவோம் [வோம்
தொழில்பெருக்கிக் கலைவளர்த்த ஜோதி நாடாயாக்குவோம்
நோய்ந்தநல்லஇன்பவெள்ளம் வாழநாங்கள்தேக்குவோம் ஓ

## 5 போராயுதம் எடு!

வழிநடைப் பாட்டு

1) கட்டளை இட்டழைக்கும் செங்கொடிக் கீழே
கடல் அலை போலவே படை திரள்வாயே
ஒட்டிய வயிறொடு தினம் உழைப்போனே
ஓங்குக! பெரும் புரட்சி என உரைப்பாயே

2) பிழைபுரி முதல் படைத்த பேய்ச் சமூகமே
பிடித்திருக்கும் போது ஏது வாழ்வில் சுகமே
உழைப்பினால் நாட்டினை பிழைக்க வைப்போனே
உண(வு)உடை பெற்று வாழ போர் தொடுப்பாயே

3) ஒப்பிலாத **ரஷ்ய, பால்கன்** நாட்டு மக்களே
உறிஞ்சி வாழ்ந்த கூட்டத்தை ஒழித்து விட்டாரே
அற்புத வாழ்வொடு நல்லாட்சி கண்டாரே
ஆதிபத்ய வெறிமனிதர் பீதி கொண்டாரே

4) சீனதேச மக்கள் **செந்தீ** உக்ர மாகுதே
சியாங்கேஷேக்குக் கூட்டமந்த தீயில் வேகுதே
சீனாவிலே பாதியைத் தன் சொந்தமாக்கியே
சோஷலிஸ பாதை நோக்கிச் செல்லுகின்றதே

5) தெலுங்கனை முழுவதுமத் தீப் பரவியே
தீரப்போர் புரிந்து மக்கள் ஆட்சி கண்டதே
மலபாரிலும் மக்களைத் தூண்டிவிட்டதே
மலாயா, பர்மா தேசத்தில் நுழைந்துவிட்டதே

6) சுதந்திரம் உமக்கில்லை தெரிந்து கொள்வாயே
சுரண்டுவோர் ஒரு சிலர்க்கே சொந்தமென்பாயே
மதங்கொண்ட காங்கிரஸார் ஆட்சி தன்னிலே
மக்களுயிர் குண்டடியால் மாண்டுபோகுதே

7) ஜனவிரோத ஆட்சி தன்னை சாய்த்திடுவாயே
ஜனங்களுக்கே **அரசுரிமை** என்றுரைப்பாயே
கனத்**தொழிற் சாலையைக்** கைக்கொள்ளுவாயே
காடு, **பூமி** உழவனுக்கே சொந்தமென்பாயே

8) அமெரிக்க முகாமிலே அணிவகுத்துமே
அதோவரும் விரோதியை அறிந்து கொள்ளுமே
நிமிர்ந்திடு! விரைந்திடு!! நெஞ்சந்தன்னையே
நெக்கேவிடாத **பாறைபோல** உறுதியாக்கிடு!!!

9) கையிலே போராயுதம் எடு, எடு, எடு!
கனன்றெழுந் தெதிரிக்கே அடி கொடு, கொடு!!
செய்திடு!, செய்திடு!! சீறிச்செய்திடு!!!
சிறப்புறும் நல்வாழ்வுக்காக சீறிச்செய்திடு. (க)

## 6 பாஸிஸப் பேய்ச் சட்டம்!

வாச்சாரே என்ற மஹாமாயா மெட்டு

போட்டாரே ஆட்கொல்லிச் சட்டமே – வளரும்
பொதுஜனத்தை யழிக்கும் திட்டமே – நேரு சர்க்கார் (போ)

எடுப்பு

நாட்டில் உழைத்திடும் - பாட்டாளி மக்களை
காட்டு விலங்கினைப் போலவே - தோட்டாவால் சுட்டு
வீழ்த்தவே - நேரு சர்க்கார் (போ)

வசனநடை

1) தியாகத்தின் உச்சியில் மக்களே ஏறினர்
தேச சுதந்திரம் வேண்டியே நின்றனர்
"சுயதேச பக்தர்கள்" ஆட்சிக்கு வந்தனர்
துப்பாக்கி மக்கட்கு பரிசாகத் தந்தனர் (போ)

2) ஜெனரல் டையர்கள் உருவம் கொடுத்திட
தேசத்தில் ஸப்இன்ஸ்பெக்டர்கள் தாங்கிட
ஜனங்களைச் சுட்டு சுடுகாடு ஆக்கிட
ஜாலியன் வாலா பாகெங்கும் தோற்றிட (போ)

3) நிலச்சுவான் கூட்டங்கள் நெல்லைக் குவித்துமே
நித்தமும் கொள்ளை யடிப்பதைப் போக்கிட
மலபார், ஆந்திர மக்கள் எதிர்ப்பதால்
மாய்த்திட பேய்ச்சட்டம் ஏவி விடுத்திட (போ)

4) ஹேப்பியஸ் கார்ப்பஸ் உரிமை பறித்திட
இன்னொரு அவசரச் சட்டம் பிடித்துமே
காப்பாக பாஸிஸ சட்டத்தோடு சேர்த்தார்
கம்யூனிஸத்தையே தாக்கி நசுக்கிட (போ)

5) உற்றவர், மற்றவர் கம்யூனிஸ்ட் தோழரை
வீட்டில் குடிகொள்ளச் செய்வது கூடாதாம்
புற்றிலே வாழ்ந்திடும் பாம்பிற்கும் கீழாக
புத்தியி லெண்ணி புதிய தினுசாக (போ)

6) கஞ்சியும் தண்ணியும் ஊத்தக் கூடாதாம்
கருத்தை வெளியிட்டு சொல்லவும் கூடாதாம்

கொஞ்சமா அக்ரமம் இன்னும் அநேகக்
கொடுமை நிறைந்த குணவெறி கொண்டுமே (போ)

7) யானை கொழுத்தால் தானே மண்ணை வாரி
யாவும் தலைமேலே போடும் அதுபோல
வீணில் மதிகெட்டுப் போனதால் மக்களை
வீழ்த்துதல், ஆழ்த்துதல் விட்டு விடுமோ? (போ)

## 7 "சுதந்திரத்தின்" சொரூபம்!

நிக்கா புருஷர் பேச்சில் என்ற மெட்டு

காங்கிரஸ் ஆட்சிக்காரே — உங்க
கத்த வித்தை எல்லாம் காட்டாதிங்க (கா)

1) தூங்கலிங்க நாங்கள் இங்கே
தொடையில் கவுறு திரிக்காதிங்க
ஆங்கிலேய பேயொடு சேர்ந்துமே
ஆளுக்கொரு பங்கு போடுறிங்க (கா)

2) இந்திய முதலாளிகளின்
ஏவலாளராய் இருக்குறிங்க
சொந்தபுத்தி இல்லாமலே நீங்க
சுத்தி சுத்தி சலாம் போடுறிங்க (கா)

3) சமஸ்தான மன்னர்களின்
சம்பந்தி போலவே ஆயிட்டிங்க
அமெரிக்கக் கூட்டத்தோடு ஒன்றாய்
அன்புடன் கையை குலுக்குறிங்க (கா)

4) ஜமீன்தார்கள் கூட்டங்களை
தக்கபடியே வளக்குறிங்க

ஜமீன்முறை ஒழிப்பை எந்த
சாக்கடையில் போட்டு வைத்திட்டீங்க (கா)

5) கண்ட்ரோல் எடுத்திட்டீங்க
கள்ளமார்க்கட் பெருத்ததுங்க
திண்டாட்டம் போடுறங்க நாங்க
தின்ன சோத்துக்கும் துணியுக்குங்க (கா)

6) சொத்துக்களை நாட்டுக்காக
சொந்தம் பண்ணுறோம் இன்னிங்க
பத்தாண்டு போனபின்பு அதை
பாக்கலாமுன்னு பசப்புறிங்க (கா)

7) கள்ளமார்க்கட் செய்வோருக்கே
கடுஞ்சட்டம் ஒண்ணும் போடலிங்க
பிள்ளைக் குட்டிக்காரனின் ரத்தமே
பிறிடவே சட்டம் செய்யுறிங்க (கா)

8) சுதந்திரமே வாங்கிட்டீங்க
சுண்டுவிரலையும் ஆட்டலிங்க
இதமான ஜனநாயகத்தை
ஏமாத்திய காலம் போச்சுதுங்க (கா)

9) உள்ளதெல்லாம் சொல்லுறங்க
உங்களுக்குக் கோபம் பொங்குதுங்க
வெள்ளைக்காரன் செய்யப் பயந்திட்ட
விபரீதப் போக்கில் போகுறிங்க (கா)

10) அடக்குமுறை பாணத்தாலே
அணுவும் அசைக்க முடியாதுங்க
முடக்கிடவே பாக்குறிங்க எந்த
மூலையில் ஆச்சுது காட்டிடுங்க (கா)

11) உங்க நேரு பட்டேல்களும்
ஓமந்தூரு சாமிகளும்
பங்கப்பட்டு போகிற காலமும்
பக்கத்திலே வந்து நிக்குதுங்க (கா)

12) பாஸிஸப் போக்கிலே போகுறிங்க
பாட்டாளி கிட்டது செல்லாதுங்க
நாசமாகப் பூடுவிங்கோ இந்த
நாட்டு ஜனங்க கிளம்பிட்டாங்க (கா)

## 8 இரு! — கொஞ்சம் — பொறு!!

சொந்த நாட்டில் பரர்க்கடிமை என்ற மெட்டு

1) விடுதலே வந்தபின் இந்நாடு சொர்க்கமாய்
மெய்த்திடும் – இன்பம் – துய்த்திடும்
கொடுவழி போகாத குடியரசாட்சியாய்
கொள்ளுவேன் – எங்கும் – விள்ளுவேன்

2) நாட்டின் பொதுச்சொத்தாய் மூலத்தொழில்களே
நாட்டுவேன் – பொருள் – இட்டுவேன்
பாட்டாளி வாழ்ந்திட என்றுமே இன்பத்தைப்
பாய்ச்சுவேன் – நாட்டை – ஓச்சுவேன்

3) தொழும்பர் நிலமெல்லாம் உழவர்க்குச் சொந்தமாய்
செய்யவே – அவர் – உய்யவே
எழுதித் தருகிறேன் "சத்தியம்" நம்புங்கள்
என்றுயே – சொல்லி – நின்றுயே

4) மன்னிய ஆளுகை மக்கள் பெயராலே
வாங்கியே – பதவி – தாங்கியே
சொன்னதைக் காற்றில் பறக்கவிட்டே இன்று
துள்ளுருய் – கெர்வம் – கொள்ளுருய்

5) நம்பியிருந்திட்ட இந்நாட்டு மக்களும்
நரிகளோ? – அன்றிப் – பரிகளோ?
தும்பினால் கட்டிக்கிடந்திடும் நாய்களோ?
சொல்லுமே – இங்கே – விள்ளுமே

6) அம்பாரமாக உணவுப் பொருள் எல்லாம்
ஆக்குவோர் – இங்கே –தேக்குவோர்
கும்பிக்குணவளி என்றுனைக் கேட்டதும்
கொல்லுறாய் – சுட்டுத் – தள்ளுறாய்

7) உருசியோடுண்டு உழைப்பைச் சுரண்டுறுன்
ஒவ்வுமோ? – சட்டம் – கவ்வுமோ?
அரிசிக்குக் கும்பலாய் கூடிடும் மக்களை
ஆழ்த்துறாய் – உடல் – வீழ்த்துறாய்

8) கோடிக் கணக்கிலே கொள்ளை யடிப்பதை
கொத்துமோ? – சட்டம் – நத்துமோ?
நாடித்தளர்ந்த மனிதன்முன் துப்பாக்கி
நாட்டுறாய் – உயிர் – வாட்டுறாய்

9) மக்களும் செய்திட்ட மாபெரும் நன்றியை
மாய்க்குறாய் – அதை – சாய்க்குறாய்
கைக்குள் படைகொண்ட காங்கிரஸ ஆட்சியே
காட்டாதே – கையை – நீட்டாதே

10) முதலாளி வர்க்கத்தைத் தாங்கிப் பிடித்திடும்
மோகமோ? – அதன் – வேகமோ?
பதவி வெறிகொண்டு காத்திடத் துள்ளிநீ
பாய்வதோ? – மக்கள் –மாய்தவோ?

11) தெம்பற்ற மாந்தர்க்கு ஜீவநாடியாகத்
தேடியே – தினம் – நாடியே

வெம்புயல் போன்றதோர் கம்யூனிஸ சக்தி
மேவுதே- எங்கும் - தாவுதே

12) எக்காளமிட்டு இருக்கும் பேயாட்சியே
இருஇரு! - கொஞ்சம் - பொறுபொறு!!
மக்களும் அஞ்சாது மலைபோலெழுந்தனர்
மாளுவாய் - மோதி - தூளாவாய்

## 9 காங்கிரஸ் முதலாளிக்கும் கம்யூனிஸ்ட் தொழிலாளிக்கும் தர்க்கம்

மாடு தின்னும் புலையா என்ற மெட்டு

காங் 1) ஊமை ஜனங்களடா - அவர்கள்
ஓய்ந்து கிடந்திடுவார்
ஏமாற்றி வந்தோமடா - அதனை
எடுத்துச் சொன்னாயடா

கம். 2) ஊமை ஜனங்களல்ல - அவர்கள்
உலகச்சிற்பி ஐயா
ஏமாற்றி விட்டோமென - நீங்கள்
எண்ணிட வேண்டாமையா

காங். 3) தொழுது கிடந்திடுவார் - எங்களை
சுற்றிக் கிடந்திடுவார்
கழுதை போலுழைப்பார் - அவர்க்கு
காட்டினாய் பாதையடா

கம். 4) பதவி யடைவதற்கே - நீங்கள்
பலபல சொல்லி வந்தீர்
அதனை சொல்வதிங்கே - குற்றம்
ஆகா தாகாதையா

காங். 5) கிசான்களை எங்கிலுமே - உணவுக்குக்
கிண்டி நீ விட்டாயடா
நெசவாலைக் காரர்களை - கூலியே
நிறையக்கேள் என்றாயடா

கம். 6) ஜமீன்தாரி ஒழிப்போ - உழவர்க்கு
தக்க உணவளிப்போ
அமைந்த தொழி லனைத்தும் - பொதுமை
ஆக்கவோ இல்லை ஐயா

காங். 7) ரயில்வே தொழிலாளர் - கிடந்து
ராப்பகல் வேலை செய்வார்
உயிர்வாழ சம்பளமும் - வேலைக்கு
ஓய்வுங்கேள் என்றாயடா

கம். 8) தேசிய சொத்தென்றே - ஏமாற்றும்
சேதியைச் சொன்னேனையா
மாசம் பத்தேமுக்கால் - கோடிரூபா
வாங்குவோன் யாரையா?

காங். 9) உண்ணும் பொருள் எல்லாம் - மற்றும்
உடைவும் மலிந்திடவே
கண்ட்ரோல் எடுத்தோமடா - அதனை
கண்டித்துச் சொன்னாயடா

கம். 10) பணத்தினர் சூழ்ச்சி ஐயா - அதனால்
பண்டவிலை ஏறியதே
துணியில் பத்துகோடி - லாபம்
சுரண்டினார் மாதம் ஐயா

காங். 11) வர்க்க போதஞ் சொல்லி - மக்களை
வளர்க்கும் ஒற்றுமையால்
பக்குவமாய்ப் புரட்சி - செய்துமே
பழிகொள்ளப் பார்க்கிறாடா

கம். 12) வாழ்வைப் பறித்துவரும் - உங்கள்
வர்க்க நலங்காக்க
கீழ்த்திசை நாட்டிலுமே - லாபக்
கொள்கை கொண்டது யார்?

காங். 13) நாட்டினை ரஷ்யருக்கே - நீயும்
நாடி யடகுவைக்க
கூட்டுச் சதிசெய்யும்
இனக்கொள்கை யறிந்தோமடா

கம். 14 அமெரிக்கா, பிரிட்டனுக்கே - நாட்டை
அடகு வைத்தது யார்?
சுமந்தீர் பல குற்றம் - இன்னும்
சொல்லுந் தரமாமோ?

காங். 15) கம்யூனிஸம் வளர்க்க - இந்த
காங்க்ரஸ் இருக்கும்வரை
சும்மா விடமாட்டோம் - அதனை
தொலைத்துப் போடும்வரை

கம். 16) ஹிட்லர் முசோலினியும் - அதனை
இம்மியுங் கிள்ளவில்லை
கெட்டுப் போகஇன்றே - நீங்கள்
கிளைத்தீர் நல்லதையா

காங். 17) சிறைக்குளே தள்ளிடுவேன் - உன்னை
சித்திர வதை செய்வேன்
அறைக்குள் இருந்தங்கே - நீயும்
ஆற்றடா உன் தொண்டே

கம். 18) நெஞ்சைப் பிளந்தாலும் - என்றன்
நெறியில் பிறழ்வேனோ
வெஞ்சிறை போட்டாலும் - கொள்கையை
விட்டு விடுவேனோ?

காங். 19) மக்களைத் தூண்டிவிட்டே - ஆட்சியை
மாய்த்திடப் பார்க்குறடா
மக்கி மடிந்துபோடா - உனது
மமதையைக் காட்டிடடா

கம். 20) வளர்ந்து வரும் சக்தி - உலகிலே
மக்களின் **மாசக்தி**
பிளந்திடும் உம்மாட்சி - நிச்சயம்
பூத்திடும் **அவராட்சி**

## 10 கதராட்சியின் கொள்கை!

வலியோர் சிலர் என்ற மெட்டு

1) பிணமாகுறோம் உணவே கொடு!
எனக் கேட்பது பிழையோ?
பிரகே புரி சிலர் இன்பமே
பெறுதல் மட்டும் முறையோ?
தணல்போ லெழும் ஜனசக்தியை
தடுத்தா லிங்கழியுமோ?
தணியா தினி ஒரு நாழியும்
சரிதை வழி இதுவே.

2) நிணமே யுணும் கழுகேயெனும்
அண்ணமலை, கங்கா
நிதியே படை பிர்லாவொடு
டோக்கு, டவுன், டாட்டா
உணவே பறி நில மேவிய
உதிரங் குடி கயவோர்
உடலே பரு வட பாதிகள்,
திருவா வடு குழுவால்

3) குண மேவிய கத ராட்சியின்
கொள்கை பெருங் கொள்கை
கொலை பாதகத் தொழிலைவிட
குறி வேறெதும் இலையே
பண நாயகம் நடமா டிடும்
படு பாதகச் செயலால்
பசியால் துடி எளியோ ருயிர்
படவே வதை செயுதே

4) ஜன நாயக உர மேவியே
ஜக மீது பரவியே
தரைமே லது முத லாளரை
தவிடே படச் செயுதே
துணிவோ டது வெகு வேகமாய்
உனை நாடி வருகுதே
சொன்னே னிது சத்ய மிங்கே
சத்யம் பெருஞ் சத்யம்

சுதந்திரம் பிரஸ்,
புதுவை

குறிப்பு:- தோழர் **பரத்வாஜ்** பாட்டுடன் பாடல் நெ-2. சபதமும், தோழர். **குப்புசாமி** பாட்டுடன் பாடல் நெ-4. ஆணை யேற்போம் என்பதும் தனித்தனியல்ல. இருவர் பேரிலும் பிரதிக்ஞை ஏற்பதால் சேர்த்துப் பாடும்படி கோருகிறோம்.

பிரஞ்சிந்தியாவின் பரிபூரண சுதந்திரத்திற்காகப்

போராடும் சிறந்த தொழிலாளர் இயக்க

வாரப் பத்திரிகை

# "சுதந்திரம்"

சந்தாதாரராகச் சேர்ந்துவிட்டீர்களா?

வருட சந்தா ரூ. 4

ஆறுமாத சந்தா ரூ. 2-4

தனிப் பிரதி அணா 1

கிடைக்குமிடம்:

சுதந்திரம் பிரசுராலயம்

108. மதராஸ் வீதி,

புதுச்சேரி.